482—

சேரன் மகாதேவியில் யானைக்கால் வியாதியைத் தடுக்க தனி மையம் அமைத்தல்.

*10430—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி - வீரவநல்லூர் பேரூராட்சியில் 'யானைக்கால்' (Elephantiasis) வியாதி பரவாமல் தடுக்க சேரன்மகாதேவியில் தனி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேரன் மகாதேவி வீரவநல்லூர் பேரூராட்சியில் அரசு மானியம் வழங்கும் யானைக்கால் நோய்த் தடுப்பு/கொசுத் தடுப்பு போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட வில்லை. இத்தகைய திட்டங்களை அந்த பேரூராட்சி செயல்படுத்த விரும்பினால் பரிசீலனை செய்யப்படும்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேரன் மகாதேவி வீரவநல்லூர் பேரூ ராட்சியில் திடீரென இந்த யானைக்கால் வியாதி சில மாதங்களுக்கு முன்பிருந்து வேகமாக பரவி வருகிறது. அதைத் தடுப்பதற்கான ஒரு தனி மையத்தை சேரன் மகாதேவி கோட்டத் தில் நீங்கள் அமைத்துக் கொடுத்திருப்பீர்களானால் இது கன்னியா குமரியில் அதிகமாக இருந்தது, நெல்லை மாவட்டத்திலே அதிக மாக இல்லை என்று இருந்தபோது திடீரென என்னுடைய தொகுதியிலே இது அதிகமாக பரவ வாய்ப்பு இருக்கிறது. அதனால் அதை தடை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாராஎன்பதோடு நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரைமரி ஹெல்த்சென்ட்டருக்கு ரூ. 50,000 அளவிலே மருந்துகள் சப்ளை செய்ததாகச் சொன்னார்கள். நான் அந்த பிரைமரி ஹெல்த் சென்ட்டருக்குச் சென்றபோது. . ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : அந்த மருந்துகள் இதுவரையிலும் அவர்களுக்கு வரவில்லை, தேவையான மருந்துகளும் இல்லை என்று சொல்கிறார்கள். பக்கத்து பிரைமரி ரிசர்ச் சென்ட்டரில் வாங்குவதற்கும் அவர்களுக்கு அனு மதி இல்லை என்று சொல்கிறார்கள், இப்படி ஒரு எமர்ஜென்ஸி நேரத்திலே பக்கத்திலே வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல்_27]

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைமரி எல்த்சென்டருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இப்போது நான் இங்கே சொல்லியிருப்பது இந்த யானைக்கால் நோய் தடுப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் உதவியுடன் நாம் இதை செயல்படுத்துகிறோம். எனவே, அந்த மத்திய அரசினுடைய உதவியை நாம் பெற வேண்டுமென்று சொன்னால், அந்த யூனியனிலிருந்து, பஞ்சாயத்திலிருந்து நமக்கு புரபோசல் அனுப்புவார்களானால் அதை வைத்துக்கொண்டு மத்திய அரசிடம் கேட்டு நாம் அதை அமைக்க முடியுமா என்று நடவடிக்கை எடுக்கலாம். மாநில அரசின் உதவியோடு பஞ்சாயத்து அதில் நடவடிக்கை எடுக்கலாம். எனவே, உள்ளாட்சித் துறைக்கு இப்போது இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி வந்தவுடனேயே எங்களுடைய துறையினுடைய சார்பாக உள்ளாட்சித் துறைக்கு இந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அங்கேயிருந்து புரபோசல் வருகிறபோது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பிரைமரி எல்த் சென்டரைப் பொறுத்தவரையில் மருந்துகள் ஏற்கெனவே அந்த அந்த மாவட்டங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அங்கே போய்ச் சேரவில்லை என்று சொன்னால் அது அந்தப் பகுதியிலுள்ள அதிகாரியின் தவறு ஆகும், எனவே, அப்படி ஒருவேளை மருந்துகள் வரவில்லை என்று சொன்னாலும் கூட லோக்கல் பர்சேஸ் என்ற முறையில் அவர்களே வாங்கிக்கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது, பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட காரணங்களை எந்த அதிகாரியாவது சொல்வார்களானால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீரவநல்லூர் பேரூராட்சியில் இந்த நோய் பரவுவதை அந்த பேரூராட்சியில் ஒரு தீர்மானமாகப் போட்டு அதை தமிழக அரசுக்கு நாங்கள் அனுப்ப வேண்டுமா, அல்லது மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்குத் தான் அனுப்ப வேண்டும். அதற்குப் பின்னால் அரசாங்கம் இங்கேயிருந்து அதை மத்திய

அரசுக்கு அனுப்பும். மத்திய அரசிடமிருந்து ஒருவேளை நிதி கிடைப்பதற்கு தாமதம் ஏற்படும் அல்லது கிடைக்காது என்ற நிலை இருக்குமானால் மாநில அரசு மூலமாக அதை நிறைவேற்ற முடியுமா என்பதைப் பற்றி நாம் ஆலோசனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 483, டி. எம். ரங்கராஜன் மற்றும் திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

483—

அரசு மருத்துவமனைகளில் இரத்ததானம் செய்வோரை பரிசோதனை செய்தல்

*16918—திரு. டி. எம். ரங்கராஜன்
திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகுமக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் இரத்ததானம் செய்வோருக்கு எய்ட்ஸ் நோய் உள்ளதா என்று பரிசோதனை செய்தபின் தான் இரத்தம் பெறவேண்டும் என்ற விதிமுறை இல்லையா?

(ஆ) ஆம் எனில், விதிகளைத் திருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விதிமுறைகள் உண்டு.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ‘ஆம்’ என்று சொன்னார்கள். அரசு மருத்துவமனைகளில் மட்டுமல்லாமல் இன்றைக்கு தனியார் மூலமாக ரத்த தானம் எல்லாம் செய்யப்படுகின்றன. அதேபோல் தனியார் மூலமாக ரத்ததானம் செய்கின்றபோது இந்த விதிமுறைகள் பின்பற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் மத்திய அரசின் சட்டம். அந்த அடிப்படையில் தான் இந்த ரத்த பரிசோதனை செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யார் ரத்த தானம் செய்தாலும் அந்த ரத்தத்தை பரிசோதனை